**சிதம்பரம் நகராட்சி**



**2023 ம் ஆண்டு வைகாசி திங்கள் 3–ம் நாள் 17.05.2023 புதன் கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

| மன்றக்கூட்டப் பொருள் |
|---|

**1)** நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)அவர்களின் ஏப்ரல்-**2023–**ம் மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 347 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**2)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவி கொசு ஒழிப்பு பணிகளில் கங்கை மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் ஈடுபடுத்தப்பட்டுவரும் 50 நBC பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமைத்து பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தகாலம் 31.05.2023 உடன் முடிவடைவதால் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்க்கப்பட்டு வரும் கங்கை மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேலும் மூன்று மாதங்களுக்கு 01.06.2023 முதல் 31.08.2023 வரை பணி நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2481/2021/எச்.1

தீர்மானம் எண் 348 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**3)** சிதம்பரம் நகராட்சி வருவாய் பிரிவு 2023-24-ம் ஆண்டிற்கான சொத்துவரியில் 5 % ஊக்கத்தொகை வழங்க சுற்றறிக்கை வரப்பெற்றதன்பேரில் சிதம்பரம் நகர பொதுமக்களுக்கு அறிவிப்பு கடிதம் வழங்கியதற்கு பட்டியல் தொகை ரூ.6107/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 964/2023/அ2

தீர்மானம் எண் 349 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**4)** சிதம்பரம் நகராட்சி வருவாய் பிரிவு **2023-2024**-ம் ஆண்டிற்கான சொத்துவரியில் 5% ஊக்கத்தொகை வழங்க சுற்றறிக்கை வரப்பெற்றதன் பேரில் சிதம்பர நகர பொதுமக்களுக்கு அறிவிப்பு வழங்க டிஜிட்டல் பேனர் 9 எண்ணிக்கையில் 6x4(5) மற்றும் 15x10(4) வைத்ததற்கு பட்டியல் தொகை **ரூ,18,500/-** வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலக குறிப்பு:** 1)மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தொகையினை

நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்,

(ந.க.எண்:965/2023/அ2)

தீர்மானம் எண் 350 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**5)** சிதம்பரம் நகராட்சி 16-வது வார்டு இளமையாக்கினார் கோவில் கீழ்க்கரையில் அமைந்துள்ள அங்காளம்மன் கோவில் எதிரில் உள்ள முதல் மற்றும் இரண்டாம் தெரு பகுதியில் புதிய பாதாள சாக்கடை திட்டத்தில் குழாய் அமைக்கப்படவில்லை. இப்பகுதியில் நகராட்சியின் சொத்துவரி 21 குடியிருப்புகளுக்கு உள்ளன. இப்பகுதி பொதுமக்களின் சுகாதார நலன் கருதி புதியதாக 160 mm PVC குழாய்கள் மற்றும் ஆய்வுக்குழிகள் அமைக்கும் பணியினை நிதிநிலைக்கு ஏற்ப மேற்கொள்ளும் பணிக்கும், பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 4,50,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 351 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**6)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய **11.04.2023** அன்று **கல்வி நிதி (Education Fund) 2022–23 ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **கல்வி நிதி (Education Fund) 2022-23** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 2, சம்பந்தகாரத்தெரு பள்ளி வளாகத்தில் ஒருங்கணிந்த சமையற்கூடம் கட்டும் பணி. | மெஸ்ஸர்ஸ். ஸ்ரீ சண்முகசுந்தரம் & கோ, சிதம்பரம். | 28,00,000/- | மதிப்பீட்டு விலையை விட (–) 0.17 % குறைவு | |
| | | திருமதி.கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், பணங்காடு | | -- | மதிப்பீட்டு விலையை விட 0.84 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **(–) 0.17 %** மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸ்ஸர்ஸ். ஸ்ரீ சண்முகசுந்தரம் & கோ, சிதம்பரம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 352 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**7)** சிதம்பரம் நகராட்சி NSMT**–2022–23–ன்**கீழ் மதிப்பீடு ரூ. **29.50** இலட்சத்திற்கு சிதம்பரம் நகராட்சி, கள்ளுகடை சந்து, காதர்கான் தைக்கல் தெரு, சகஜாநந்தா தெரு, அருந்ததியர் தெரு, புளியந்தோப்பு, சத்யா நகர் மெயின்ரோடு, பொன்னம்பலம் நகர் முதல் குறுக்கு தெரு, சின்னகாஜியார் தெரு **1,2**–வது குறுக்கு சந்து, மன்னார்குடி சந்து, மற்றும் ஜவஹர் தெரு **1,2**–வது குறுக்கு சந்து ஆகிய தெருக்களில் உள்ள சிமெண்ட் சாலையினை சீரமைக்கும் பணிக்கு **27.04.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 353 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**8)** சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான மாலைக்கட்டி தெரு நடுநிலைப்பள்ளியில் 133 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் உள்ள கழிவறை மிகவும் சிதலமைடைந்து மாணவர்கள் உபயோகப்படுத்துவதற்கு சிரமமாக உள்ளது. எனவே ஏற்கனவே உள்ள கழிவறையினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கழிவறை கட்டும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 18.20 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 354 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**9)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன்கீழ் நடராஜா கார்டன் பகுதியில் புதிய பூங்கா அமைக்கும் பணி ரூ.58.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திருமதி.கே.முத்துலட்சுமி ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி மேற்கொள்ளப்படும்போது கூடுதலாக புல் மற்றும் மரக்கன்றுகள் வளர்த்தல் மற்றும் Alka Panel Name board அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.10.50 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்குக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 355 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**10**) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன்கீழ் நடராஜா கார்டன் பகுதியில் புதிய பூங்கா அமைக்கும் பணி ரூ.58.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திருமதி.கே.முத்துலட்சுமி ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளும் இடம் மிகவும் தாழ்வான பகுதியாக இருந்ததால், மண் நிரப்பி பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மண் நிரப்பி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்குக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 356 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**11)** சிதம்பரம் நகராட்சியில் வார்டு எண். **4,16,26** ஆகிய பகுதிகளில் வடகிழக்கு பருவமழையால் சாலைகள் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட பணியினை செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. **5.00** இலட்சத்திற்கு தார்சாலை ஒட்டுப்பணி ( Patch work) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.**

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 357 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**12)** இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பணியில் எதிர்வரும் ஏப்ரல் மே மற்றும் ஜீன் மாதம் நடுப்பகுதி வரை கோடைக்கால பருவ நிலை காலங்களில் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் வழங்க முன்னேற்பாடுகள் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளன. கோடை பருவத்தில் நீர் ஆதாரம் குறைவு ஏற்பட்டால் இடைக்கால கூடிய நீர் ஆதாரத்தை குடிநீர் விநியோகம் குழாய் இல்லாத பகுதி அல்லாது குடிநீரில் மாசு கலக்குவதை தவிர்க்க குழாய் மூலம் சப்ளை நடைபெறுவதை தடைசெய்த பகுதி மற்றும் மின்சாதனங்கள், குழாய்களில் பராமரிப்பு மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கு சீரான முறையில் விநியோகம் செய்வதற்கு தற்போதுள்ள ஒரு குடிநீர் லாரி (6000 லிட்டர் கொள்ளளவு) ஒரு குடிநீர் டிராக்டர் (4000 லிட்டர் கொள்ளளவு) வசதிகள் போதுமானதாக இல்லை. எனவே எதிர்வரும் இரண்டரை மாத கோடைபருவ காலம் வரை வாடகை அடிப்படையில் 4000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு டிராக்கரை பயன்படுத்த அனுமதியும், அதற்கான மதிப்பீடு செலவினம் ரூ. 5,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**இப்பணிக்கானசெலவினத்தினை 2022-23ம் நிதியாண்டு குடிநீர் வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 358 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**13**) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3, நமக்கு நாமே திட்டம் 2021-22ன்கீழ் ஆசிர்வாத நகரில் உள்ள பூங்கா அமைக்கும் பணி ரூ.9.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திருமதி.கே.முத்துலட்சுமி ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளும் இடம் மிகவும் தாழ்வான பகுதியாக இருந்ததால், மண் நிரப்பி பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மண் நிரப்பி மற்றும் Granite benchகள் அமைத்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்குக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 359 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**14**) சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான ஞானபிரகாசம் குளத்தினை தூர்வாரி மேம்பாடு செய்யும் பணி KNMT 2021-22-ன் கீழ் நடைபெற்று வருகிறது. இக்குளத்தின் நீராழி மண்டபம் மிகவும் சிதலமடைந்து மிகவும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள இக்கட்டிடத்தினை கட்டுவதற்கு நகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு, மேம்பாட்டு பணியில் வழிவகை செய்யப்படவில்லை. மேலும் இக்கட்டித்தினை தங்களது சொந்த செலவில் கட்டுவதற்கு சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோவில் பொது தீட்சிதர்கள் சார்பாக அனுமதி கோரியுள்ளார்கள். கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அவர்களுக்கு அனுமதி வழங்கிடலாம்

1. கட்டிடம் முறையான தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆலோசனை பெற்று முறையாக கட்டப்பவேண்டும்.
2. கட்டிடத்தின் உறுதித்தன்மைக்கும் கட்டிடம் கட்டும் பணிக்கும் கோயில் நிர்வாகமே முழு பொறுப்பாகும்
3. கட்டிடம் கோயில் நிர்வாகத்தின் செலவில் கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது.
4. எதிர்காலத்தில் கட்டிடத்தின் மீது கோவில் நிர்வாகம் எவ்வித உரிமையும் கோர இயலாது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நடராஜர் கோயில் நிர்வாகம் மூலம் நிராழி மண்டபம் ஞானபிரகாசம் குளத்தில் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 360 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**15)** சிதம்பரம் நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2022-23-ன்கீழ் மதிப்பீடு ரூ.21.10 இலட்சத்தில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 12.04.2023-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | **ஒப்பந்தப்புள்ளி கோரி பணி கிடைக்கப்பெற்ற ஒப்பந்தாரர் பெயர்** |
|---|---|---|---|
| | **நமக்கு நாமே 2022-23( IInd PHASE)** | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17–ல் முக்கிய பிரதான சாலையில் 11 இடங்களில் CCTV Camera பொருத்தும் பணி. | 5.80 | மெஸ்ஸர்ஸ் குளோபல் அசோசியட்ஸ், நெல்லிக்குப்பம் |
| 2 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வெல்லபிறந்தான் தெருவில் உள்ள நியாயவிலைகடையினை மேம்பாடு செய்யும் பணி. | 1.50 | மெஸ்ஸர்ஸ் குளோபல் அசோசியட்ஸ், நெல்லிக்குப்பம் |
| 3 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட மாலைக்கட்டி தெருவில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் Smart Class Room அமைக்கும் பணி. | 13.80 | மெஸ்ஸர்ஸ் குளோபல் அசோசியட்ஸ், நெல்லிக்குப்பம் |
| | **கூடுதல்** | **21.10** | |

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 361 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**16)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய **21.04.2023** அன்று **வருவாய் நிதி 2022–23 ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **வருவாய் நிதி 2022-23** | | | | |
| **1** | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட மழையினால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | 9,50,000/- | மதிப்பீட்டு விலையை விட **(–) 0.07** % குறைவு | |
| | | திருமதி.கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், பணங்காடு | | –– | மதிப்பீட்டு விலையை விட **0.91** % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி (–) 0.07 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.கிருஷ்ணமூர்த்தி நாஞ்சலூர் ஒப்பந்ததாரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 362 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**17)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி அலுவலகத்தில் இயங்வி வரும் நுண் உரக்கிடங்கில் உள்ள காய்கறி அறைக்கும் இந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் நுண்உரம் தயாரிக்கும் பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட இயந்திரத்தை பழுது நீக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 363 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**18)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி அலுவலகத்தில் இயங்வி வரும் நுண் உரக்கிடங்கில் உள்ள ஈரக்கழிவு அறைக்கும் இந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் நுண்உரம் தயாரிக்கும் பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட இயந்திரத்தை பழுது நீக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 364 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**19)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் களஆய்வு பணிக்காக உள்ள TN 91 F 7705 Scrpio Jeep 1,41,000 கி.மீ இயக்கம் நடைபெற்று நான்கு Wheel டயர்கள் தேய்மானம் அடைந்து பாதுகாப்பான இயக்கத்திற்கு தடையாக உள்ளன. இந்நிலைக்கு நான்கு டயர்கள் புதிதாக மாற்ற வேண்டியுள்ளன. இப்பணிக்கும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான செலவினத்தை 2023-24-ம் நிதயாண்டு பொது வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 365 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**20)** சிதம்பரம் நகராட்சி **15–வது** நிதிக்குழு **2022–23**ன்கீழ் மதிப்பீடு ரூ. **21.90** இலட்சத்திற்கு இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) 3 எண்ணிக்கை வாங்கி வழங்கும் பணிக்கு **18.04.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெஸ்ஸர்ஸ் VEE VEE Motors, நாகை மெயின்ரோடு, திருவாரூர் நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண் 366 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**21)** சிதம்பரம் நகராட்சி **15–வது நிதிக்குழு 2022–23ன்கீழ்** மதிப்பீடு ரூ. **16.00** இலட்சத்திற்கு பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery operated Vehicle) 8 எண்ணிக்கை வாங்கி வழங்கும் பணிக்கு **18.04.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெஸ்ஸர்ஸ் சிவா ஸ்டீல் ஒர்க்ஸ், எண். 1/294, கோலியனூர், விழுப்புரம் நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 367 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**22)** சிதம்பரம் நகராட்சியில் வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையம் மூலம், மானா தெரு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நடராஜா கார்டன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கனகசபை நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சிவசிவ நகர் உயர்மட்ட தொட்டி மற்றும் மீன்மார்க்கெட் ஆழ்துளை கிணறு, வீரபத்ரசாமி கோயில் தெரு ஆழ்துளை கிணறு மற்றும் பேருந்து நிலைய கீழ்நிலை தொட்டி மூலமாக சிதம்பரம் நகருக்கு நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இப்பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததாலும், நகரப்பகுதியில அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்யவும், நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படாவண்ணமும், பொதுமக்களின் நலன் கருதியும், **14** நபர்களை ஒப்பந்த அடிப்படையில் வைத்து குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். **95**, நாள் **29.11.2019** அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் **21.11.2019** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். **111**, நாள்: **29.11.2019–ன்படி** ஒப்பந்ததாரர் திரு. எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு **29.11.2019–ல்** பணி உத்தரவு வழங்கப்பட்டு **01.12.2019** முதல் **30.11.2020** வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறும் நடவடிக்கையில் காலதாமதம், கொரானா தொற்று நோய் மற்றும் **2021** சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் போன்ற காரணங்களால் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டது. இதனால் நகர்மன்ற தீர்மான எண்.**111**, நாள் **30.11.2020**, நகர்மன்ற தீர்மோன எண்.**154**, நாள் **26.02.2021**, நகர்மன்ற தீர்மான எண்.**215**, **28.06.2021** நகர்மன்ற தீர்மான எண். **245**, நாள் **31.08.2021**, தீர்மான எண். **306**, நாள் : **30.11.2021** , தீர்மான எண்.**1**, நாள் : **11.04.2022**, தீர்மான எண். **93**, நாள் : **30.06.2022** , தீர்மான எண். **162**, நாள் : **30.08.2022** மற்றும் தீர்மான எண். **260**, நாள் : **09.01.2023** போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து **28.02.2023** வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிப்புறபணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் தொடர் நடவடிகைகயில் உள்ளது. இதனால் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களுக்கு வழங்கப்படும் தினசரி குடிநீர் விநியோகப்பணியில் அவசர அவசியம் கருதி, மேலும் மூன்று மாத காலத்திற்கு **01.06.2023** முதல் **31.08.2023** வரை இதே ஒப்பந்ததாரர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும், இதற்கான மூன்று மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.**6.50** இலட்சத்திற்கும் இதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண் 368 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**23)** சிதம்பரம் நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| டேங்கர் லாரி | -- | 2 எண்கள் |
| டம்பர் பிளேசர் | -- | 1 எண். |
| ஈப்பு | -- | 1 எண். |
| துஊகூஷ | -- | 1 எண். |
| டிராக்டர் | -- | 4 எண்கள். |
| சல்லேஜ் டேங்கர் | -- | 1 எண். |
| ஜெட் ராடிங் | -- | 2 எண்கள். |
| டி-சில்டிங் | -- | 1 எண். |
| நகர்மன்ற வாகனம் | -- | 1 எண். |
| மொத்தம் | -- | 14 எண்கள் |

மேற்கண்ட வாகனங்களை இயக்குவதற்கு, நகராட்சியில் மூன்று நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளார்கள். குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல், பொது சுகாதார பணிகள், குப்பை அகற்றுதல் போன்ற இன்றியமையாத பணிகள் இதனால் பாதிப்படைகின்றது. இதனை தவிர்க்கும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கருதியும், பொறியியல் பிரிவிற்கு 3 மூன்று ஓட்டுனர்களும், பொது சுகாதார பிரிவிற்கு 3 ஓட்டுனர்களும் ஒப்பந்த அடிப்படையில் வைத்து பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 94, நாள் 29.11.2019-ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.104, நாள் 29.11.2019-ன்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 29.11.2019-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறும் நடவடிக்கையில் காலதாமதம், கொரானா தொற்று நோய் மற்றும் 2021 சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் போன்ற காரணங்களால் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டது. இதனால் நகர்மன்ற தீர்மான எண்.109, நாள் 30.11.2020, நகர்மன்ற தீர்மான எண்.152, நாள் 26.02.2021, நகர்மன்ற தீர்மான எண்.216, 28.06.2021 நகர்மன்ற தீர்மான எண். 245, நாள் 31.08.2021 , தீர்மான எண்.305, நாள் : 30.11.2021 மற்றும் தீர்மான எண்.2, நாள் : 11.04.2022, தீர்மான எண். 94, நாள் : 30.06.2022 , தீர்மான எண். 163, நாள் : 30.08.2022 மற்றும் தீர்மான எண். 264, நாள் : 09.01.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து 28.02.2023 வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிப்புறபணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் தொடர் நடவடிகையில் உள்ளது. இதனால் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி, மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.06.2023 முதல் 31.08.2023 வரை இதே ஒப்பந்ததாரர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும், இதற்கான மூன்று மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.4.25 இலட்சத்திற்கும் இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2019/இ1)

## தீர்மானம் எண் 369 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**24)** சிதம்பரம் நகராட்சியில் 79 எண்ணிக்கை சிறுமின்விசை பம்புகள், தலைமை நீரேற்று நிலைய மோட்டார், மானா தெரு உயர்மட்ட தொட்டி மோட்டார், நடராஜா கார்டன் உயர்மட்ட தொட்டி மோட்டார், கனகசபை நகர் உயர்மட்ட தொட்டி மோட்டார், மேலரத வீதி மோட்டார், சிவசிவ நகர் உயர்மட்ட தொட்டி மோட்டார், மீன்மார்க்கெட் போர்வெல், வீரபத்ரசாமி கோயில் தெரு போர்வெல் மற்றும் மூன்று புதைசாக்கடை திட்ட நிலையங்களில் உள்ள மோட்டார் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்கள் அங்கன்வாடி மையங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்களில் உள்ள மின் பணிகளை பார்க்கவும் நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாததாலும், நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அத்தியாவசிய பணி என்பதாலும், மூன்று நபர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 92, நாள் 29.11.2019-ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 112, நாள் 29.11.2019-ன்படி ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு 29.11.2019-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த

அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறும் நடவடிக்கையில் காலதாமதம், கொரானா தொற்று நோய் மற்றும் 2021 சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் போன்ற காரணங்களால் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டது. இதனால் நகர்மன்ற தீர்மான எண்.110, நாள் 30.11.2020, நகர்மன்ற தீர்மான எண்.155, நாள் 26.02.2021, நகர்மன்ற தீர்மான எண்.214, 28.06.2021 நகர்மன்ற தீர்மான எண். 245, நாள் 31.08.2021 , தீர்மான எண். 309, நாள் : 30.11.2021 மற்றும் தீர்மான எண். 3, நாள் : 11.04.2022 , தீர்மான எண். 95, நாள் : 30.06.2022 , தீர்மான எண். 164, நாள் : 30.08.2022 மற்றும் எண். 261, நாள் : 09.01.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து 28.02.2023 வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிப்புறபணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தில் தொடர் நடவடிககையில் உள்ளது. இதனால் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி, மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.06.2023 முதல் 31.08.2023 வரை இதே ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் என்பவரின் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும், இதற்கான மூன்று மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கும் இதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2019/இ1)

தீர்மானம் எண் 370 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**25**) சிதம்பரம் நகராட்சியில் வருடந்தோறும் தோராயமாக பல திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றை கண்காணிக்க போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாததால், இரண்டு தொழில்நுட்ப உதவியாளரை ஒப்பந்த அடிப்படையில் PWDSchedule of rate 2019–20–ன் விலை விகிதத்தின் அடிப்படையில் அமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண். 93, நாள் 29.11.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 21.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.105, நாள் 29.11.2019–ன்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 29.11.2020–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2019 முதல் 30.11.2020 வரை பணியாட்களை வழங்கிட உத்தரவிடப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் மனித சக்திகளை பெற்று பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 108, நாள் :31.12.2020–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.12.2020 முதல் 28.02.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. அனுமதிபெற காலதாமதம் ஏற்படுவதாலும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் வர இருப்பதாலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் வந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.156, நாள் : 26.02.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.03.2021 முதல் 31.05.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற காலதாமதமாக இருப்பதால், அத்தியாவசிய பணியின் காரணமாக நகர்மன்ற தீர்மான எண். 217, நாள் :28.06.2021–ன்படி மூன்றுமாத காலத்திற்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் நகர்மன்ற தீர்மான எண். 250, நாள் 31.08.2021, தீர்மான எண். 309, நாள் : 30.11.2021 மற்றும் தீர்மான எண்.4, நாள் : 11.04.2022 , தீர்மான எண். 96, நாள் : 30.06.2022 , தீர்மான எண். 165, நாள் : 30.08.2022 மற்றும்

தீர்மான எண். 262, நாள் : 09.01.2023 போன்ற தீர்மானங்களின்படி கால நீட்டிப்பு செய்து 28.02.2023 வரை அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் தமிழ்நாடு முழுவதும் மேற்படி வெளிபுறபணியாளர்கள் அமர்த்தும் பணிக்கு ஒருங்கிணைந்த விலை விகிதம் தயார் செய்யும் பணி நடைபெற்று வருவதால் அனுமதிபெற காலதாமதம் ஆகும் என தெரிவித்ததன் அடிப்படையிலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.06.2023 முதல் 31.08.2023 வரை மேற்கண்ட ஒப்பந்ததரார் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மனித சக்திகளை பெற்று பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 371 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

26) இந்நகராட்சி பழைய புதைவடிகால் திட்டத்தில் கழிவுநீர் சேகரிப்பு குழாய்களில் காற்று போக்கு குழாய் (Airvent) அமைக்கப்பட்டு இயங்கி வந்தன. தற்போது புதிய பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதால் பழைய திட்டத்தின் இயக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த Airvent குழாய்கள் சாக்கடை கட்டுமான பணி சாலை புதுப்பிக்கும் பணிகளின்போது அகற்றப்பட்டு தற்போது 25 குழாய்கள் உள்ளன. Basement Fixture-ல் துரு ஏற்பட்டு பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன. எனவே இந்த 25 எண்கள் MS குழாய்களை பொதுஏலம் மூலம் அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 372 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**27**) இந்நகராட்சி வார்டு எண். 22-ல் மாரியம்மன் கோவில் தெரு மேம்பாட்டு பகுதியில் 50 குடியிருப்புகளுக்கு மேல் உள்ளன. இப்பகுதியில் புதிய பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் சேகரிப்பு முறையில் குறுகலான தெருவாக இருந்த நிலையில் TWAந மூலம் கழிவுநீர் குழாய் மற்றும் ஆய்வுக்குழிகள் அமைக்கப்படவில்லை. ஏற்கனவே ஓரிரு குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பிரதான வீதியில் உள்ள ஆய்வுக்குழி வரை சென்றடையும் வகையில் குடியிருப்பு பயன்பாட்டுக்கான சேம்பர் அமைத்து, கழிவுநீர் செல்லக்கூடிய குழாயும் சிறிதளவு விட்டத்துடன் அமைக்கப்பட்டு இயங்கிவந்த நிலையில் இதே கட்டமைப்பில் தற்போது இப்பகுதியில் உள்ள 50 குடியிருப்புகளிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு தெருவில் வந்தோடி பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகின்றன. எனவே இந்த தெருவில் தற்போதுள்ள குடியிருப்புகளின் கழிவுநீர் வெளியேற்றத்திற்கு ஏற்ப 60 மீட்டர் நீளத்திற்கு PVC குழாய் அமைத்து மூன்று ஆய்வு குழிகள் புதிதாக அமைக்கும் பணிக்கும், இப்பணிக்கான மதிப்பீட்டு செலவினம் ரூ.1,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான மதிப்பீடு செலவினத்தினை நகராட்சி பொது நிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 373 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**28**) சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் நுண் உரக்கிடங்கில் உள்ள ஈரக்கழிவு அறைக்கும் இந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் வாகீச நகர் மிற்றும் நகராட்சி அலுவலகம் பின்புறமுள்ள உள்ள நுண்உரம் தயாரிக்கும் பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட இயந்திரத்தை பழுது நீக்கி Conveyar belt சரிசெய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 374 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**29)** சிதம்பரம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக இருப்பதால் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.10, நாள் 22.03.2023-ன்படி தட்டச்சர் பதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. பொறியியல் பிரிவில் நாள்தோறும் வரும் தபால்களை கணினியில் தட்டச்சு செய்திடவும் UTIS, CM Dash board, All scheme Spreed sheet updation, தினசரி வரும் Mail Particular link updation செய்திடவும் தற்காலிகமாக வெளிமுகமை பணியாளர் மூலம் தட்டச்சர் ஒருவரை நியமித்து பணிகள் மேற்கொள்ள உரிய அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முன்மொழிவுகள் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 375 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**30)** சிதம்பரம் நகராட்சி 15.06.1998-லிருந்து தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 4.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் அமைந்துள்ளன. வழிபாட்டு தளம் என அழைக்கப்படும் இந்நகரம் இந்தியாவில் மிக முக்கியாமான சுற்றுலா தளமுமாக விளங்கககுகிறது. தற்போதைய இந்நகராட்சியின் மொத்தம் மக்கள்தொகை 64500 இருந்தாலும் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 13381 நபர்கள் வசித்து வருகிறார்கள். இந்நகராட்சியில் 54.756 கி.மீ நகராட்சி சாலையும், 8,870 கிமீ நெடுஞ்சாலைச்துறை சாலைகளும் ஆக மொத்தம் 62.386 கிமீ சாலைகள் உள்ளது

இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 15,000 -க்கு மேல் உள்ளது. மேலும், நடராஜர் கோயில் தேர்திருவிழா காலங்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தினசரி 50000 மேல் உள்ளது.

**இந்நகராட்சி பகுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் அமைந்துள்ளன**

| | | |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்குள் | 1493 |
| 2 | 20 வாட்ஸ் CFL விளக்குள் | 14 |
| 3 | 35 வாட்ஸ் CFL விளக்குள் | 18 |
| 4 | 45 வாட்ஸ் CFL விளக்குள் | 35 |
| 5 | 80 வாட்ஸ் CFL விளக்குள் | 131 |
| 6 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குள் | 417 |
| 7 | உயர்கோபுர விளக்குள் | 15 |

இந்நகர் வழிபாடு மற்றும் சுற்றுலா தளமாக உள்ளதோடு வணிக வளாகங்கள் மிகுதியாக அமைந்தும் அண்ணாமலை பல்கலைகழகத்தின் நுழைவு வாயிலாகவும் உள்ளன. மேலும் உள்ளூர் மற்றும் வெளியூர் பொதுமக்கள் தினசரி 15,000 நபர்களுக்கு மேல் அதிகாலையிலேயே நான்கு ரதவீதிகளிலும் மற்றும் நகரின் பிரதான நுழைவு அணுகு சாலைகளிலும் சென்று வருகின்றனர். இந்த சாலைகள் 15 மீட்டர் முதல் 20 மீட்டர் அகலத்திற்கு உள்ளதால் இரவு நேரங்களில் போக்குவரத்துக்கு ஏற்ற போதிய ஒளி வசதி இல்லாத நிலை உள்ளதால் பக்தர்களுக்கும், பாதசாரிகளுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

எனவே, பொதுமக்கள் நலன் கருதியும், உலக பிரசித்தி பெற்ற நடராஜர் கோவில் வழிபாட்டு தளத்திற்கு வரப்பெறும் மிகுதியான பக்தர்கள் நலன் கருதியும் மற்றும் அண்ணாமலை பல்கலைகழகத்தில் பயிலக்கூடிய மாணவர்கள் நலன் கருதியும், நான்கு ரத வீதிகளில் நடராஜ கோவில் சுற்றியுள்ள உட்புற நடைபாதையில் 72 எண்கள் ஆற்றல் சேமிப்பு விளக்குகள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் 15 CFC நிதி 2022-2023-ம் நிதியாண்டில் ரூ.60.40-லட்சம் நிதி ஆதாரம், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு புதிதாக தெருவிளக்கு அமைக்கும் பணி நடைபெற உள்ளன. மேலும், நான்கு ரத வீதிகள் மற்றும் வடக்கு மெயின்ரோடு, VGP தெரு, SP கோவில் தெரு, சபாநாயகர் தெருக்கள் அகலமாக உள்ளதோடு பொதுமக்கள் மிகுதியாக வந்து செல்லும் சாலைகளாக உள்ளதால் நடராஜ கோவில் எதிர்புறம் உள்ள நடைபாதைகளிலும் கூடுதலாக 72 தெருவிளக்குகளும், பிரதான நுழைவு சாலைகளில் 73 தெருவிளக்களும் ஆகமொத்தம் 145 எண்கள் LED விளக்குகள் Ornamertalpole-ல் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஆதாரம் அரசின் ஏதேனும் ஒரு சிறப்பு திட்ட நிதியில் ரூ.131.00 லட்சத்தை மான்யமாக வழங்கிட கோரி அரசிடம் பிரேரனை சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு:

1. பொதுமக்களின் நலன் கருதி இந்நகரின் முக்கிய நன்கு ரதவீதிகளிலும் மற்றும் பிரதான முக்கிய சாலைகளிலும் ஆற்றல் சேமிப்புடன் கூடிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி பெற பிரேரனை சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் நிதிநிலைமை குறைவினை கருதி பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.131.00 லட்சத்திற்கு அரசின் சிறப்பு திட்ட நிதி மூலம் மானியமாக நிதி ஆதாரம் கோரலாம்.

தீர்மானம் எண் 376 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**31)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய **10.12.2021** அன்று **வருவாய் நிதி 2021–22 ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி 2022-23** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி அனைத்து பிரிவில் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்களை ஆண்டு பராமரிப்பு செய்யும் பணி. | மெஸ்ஸர்ஸ் கே.கே. இன்போடெக், எஸ்.பி.கோவில் தெரு, சிதம்பரம். | 2,00,000/- | மதிப்பீட்டு விலையை விட (–) 0.45 % குறைவு | |
| | | மெஸ்ஸர்ஸ் பிரசாத் கம்ப்யூட்டர் சர்வீஸ், விருதாச்சலம். | | -- | மதிப்பீட்டு விலையை விட 1.05 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி (–) 0.45 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸ்ஸர்ஸ் கே.கே. இன்போடெக், எஸ்.பி.கோவில் தெரு, சிதம்பரம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 377 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ஓம்)திரு.கே.ஆர்.செந்தில்குமார்,
நகர்மன்ற தலைவர்,
சிதம்பரம்

இடம் : சிதம்பரம்
நாள் : **17.05.2023.**

/உண்மைநகல் உத்தரவுப்படி/

ஆணையாளர்(பொ),
சிதம்பரம் நகராட்சி.

**2)** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 347 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

K.R. [signature]

நகர்மன்ற தலைவர்,
சிதம்பரம்

இடம் : சிதம்பரம்
நாள் : **17.05.2023.**